# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol: 01 | Issue: 323 | 4 Pages | 25.6.2024 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர்: 01 | இதழ்: 323 | 4 பக்கங்கள் | 25.6.2024 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## இலங்கை சிறையில் 37 மீனவர்கள்.. பிரச்சனைக்கு தேவை நிரந்தரத் தீர்வுதான்: மு.க.ஸ்டாலின் கடிதம்



டெல்லி, ஜூன் 25

இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட தமிழ்நாட்டு மீனவர்கள் 37 பேரை உடனடியாக விடுதலை செய்ய மத்திய அரசு உடனடியாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தி உள்ளார். மேலும் தமிழ்நாட்டு மீனவர் பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வுதான் தேவைஎன்றும்முதல்வர்ஸ்டாலின் அதில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழக மீனவர்கள் 22 பேர் கச்சத்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த போது நடுக்கடலில் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டனர். தமிழ்நாட்டு மீனவர்களை விடுதலை செய்ய மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி ராமேஸ்வரம் மீனவர்கள் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுதியுள்ள கடிதத்தில் இடம் பெற்றுள்ளதாவது: முந்தைய கடிதத்தில் சுட்டிக் காட்டியது போன்று தமிழ்நாட்டு மீனவர்களை கைது செய்தல் மற்றும் அச்சுறுத்தல் சம்பவங்கள் தொடர்வதால் அவர்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அச்சமுதாயத்தினரிடையே மிகுந்த அச்ச உணர்வை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 22.06.2024 அன்று, ராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்தைச் சேர்ந்த 22 மீனவர்கள், IND TN10 MM84, INDTN10 MM88 மற்றும் INDTN10MM340 ஆகிய பதிவு எண்களைக் கொண்ட மூன்று இயந்திரப் படகுகளுடன் மீன்பிடிக்கச் சென்றிருந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எனவே, இலங்கை அரசால் கைது செய்யப்பட்ட 37 மீனவர்களையும், அவர்களது படகுகளையும் உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏற்கெனவே விடுவிக்கப்பட்ட படகுகளை இலங்கையில் இருந்து கொண்டு வருவதற்கு மீட்புப் படகுகள் மற்றும் பணியாளர்களுக்கு இன்னும் அனுமதி வழங்கப்படவில்லை. இலங்கை சிறையில் அடைக்கப்பட்டுள்ள மீனவர்களை மீனவர்களை சந்தித்து, அவர்களுக்கு ஆறுதலும் அடிப்படைத் தேவைகளையும் வழங்கிட அனுமதி தர வேண்டுமென தமிழ்நாட்டைச் சேர்ந்த பல்வேறு மீனவர் சங்கங்கள் முன்வைத்துள்ள கோரிக்கைகளைக் கனிவுடன் பரிசீலிக்க வேண்டும்.

மீனவர்களின் வாழ்வை சீர்குலைக்கும் இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாண உடனடியாக உரிய தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

ஏற்கெனவே அமைக்கப்பட்ட கூட்டுப் பணிக்குழுவினை மீண்டும் புதுப்பிக்க வேண்டும். இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் காண இலங்கை அதிகாரிகளிடம் எடுத்துரைத்திட உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

## சென்னை லேடி டாக்டர்.. திருச்சி மலைக்கோட்டை கோயில் படிக்கெட்டில் ஏறும் போது அப்படி ஒரு சம்பவம்.. பரபரப்பு



திருச்சி, ஜூன் 25

திருச்சி மலைக்கோட்டையில் சுவாமி தரிசனத்திற்காக சென்ற போது பெண் மருத்துவர் மோனிஷா திடீரென மயங்கி விழுந்தார். அவரை போர்வையில் டோலி போல் தூக்கி வந்து ஆசுவாசப்படுத்திய தீயணைப்புத் துறையினர், பெற்றோருடன் ஆட்டோவில் அனுப்பி வைத்தனர்.

திருச்சியின் மிகவும் புகழ் பெற்ற கோயில்களில் ஒன்று மலைக்கோட்டை. இது திருச்சி மாநகரின் அடையாளச் சின்னமாக விளங்குகிறது. இந்த மலைக்கோட்டை கோயிலை மக்கள் உச்சிப்பிள்ளையார் கோவில் என்று அழைக்கிறார்கள்.

திருச்சி மலைக்கோட்டை பிள்ளையார் கோவில் என்பது 275 அடி உயர மலையின் மேல் அமைந்திருக்கிறது. இந்த மலையின் பாதி தூரத்தில் சிவனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட தாயுமானவர் சுவாமி கோவில் ஒன்றும் இருக்கிறது. இந்த உச்சி பிள்ளையார் கோவிலில் 100 கால் மண்டபம், விமானம், மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுக்கள் இருக்கிறது.

இந்த மலைக்கோட்டை உச்சியிலிருந்து ஸ்ரீரங்கம் கோவில், காவேரி ஆறு, கொள்ளிடம் ஆறு, திருவானைக்காவல் கோவில் போன்றவற்றை தெளிவாக பார்க்க முடியும். மொத்த திருச்சி மாநகரின் அழகையும் மலைக்கோட்டை உச்சியில் இருந்து ரசிக்க முடியும்

3400 மில்லியன் வருடங்கள் பழமையான இந்த மலைக்கோட்டையில் மூன்று நிலைகளில் கோவில்கள் அமைந்துள்ளன. கீழே மாணிக்க விநாயகர் கோயில், மேலே உச்சிப் பிள்ளையார் கோயில், மற்றும் இடையே தாயுமானவர் கோவில் ஆகியவை இருக்கின்றன. இதைத் தவிர பல்லவர் கால குடைவரை கோவிலும், பாண்டியர் கால குடைவரை கோவிலும் இந்த மலைக் கோட்டையில் இருக்கிறது..

திருச்சி மலைக்கோட்டை உச்சி பிள்ளையார் கோவிலுக்கு தினமும் ஏராளமான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்ய வருகிறார்கள். திருச்சி மாநகரின் முக்கியமான ஆன்மீக சுற்றுலா தலமாக மலைக்கோட்டை திகழ்கிறது. இந்நிலையில் திருச்சி மலைக்கோட்டை உச்சி பிள்ளையார் கோவிலுக்கு சாமி தரிசனம் செய்ய வந்த சென்னை கீழ்பாக்கம் பகுதியைச் சேர்ந்த மோனிஷா, திடீரென மயங்கி விழுந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

எம்பிபிஸ் படித்து முடித்துள்ள சென்னை கீழ்பாக்கத்தைச் சேர்ந்த மோனிஷா, மருத்துவ மேற்படிப்புக்கான முதுநிலை நீட் தேர்வு எழுத பெற்றோருடன் திருச்சிக்கு வந்துள்ளார். ஆனால் திடீரென நீட் முதுநிலைத்தேர்வு கடைசி நிமிடத்தில் இந்தியா முழுவதும் மத்திய அரசால் ரத்து செய்யப்பட்டது. இதையடுத்து மருத்துவர் மோனிஷா, மலைக்கோட்டை உச்சிபிள்ளையார் கோவிலுக்கு சாமி தரிசனம் செய்ய சென்றுள்ளார். அவர் படிகளில் ஏறி சென்று கொண்டிருந்த போது, திடீரென மயங்கி விழுந்தார்.

இதுபற்றி தீயணைப்பு துறையினருக்கு அங்குள்ளவர்கள் தகவல் கொடுத்தனர். அதன் அடிப்படையில் சுமார் 2 மணி நேரம் கழித்து வந்த தீயணைப்பு துறையினர், மயங்கி கிடந்த மோனிஷாவை, போர்வை ஒன்றில் டோலி போல உட்கார வைத்து, கீழே தூக்கி வந்தனர். இது ஒருபுறம் எனில், சுயநினைவு திரும்பிய மோனிஷாவிற்கு முதலுதவி அளித்து அசுவாசப்படுத்தி, ஆட்டோ ஒன்றில் அவரது பெற்றோருடன் அனுப்பி வைத்தனர்.

## ஜாதிவாரி கணக்கெடுப்பை மத்திய அரசு நடத்தக் கோரி சட்டசபையில் விரைவில் தீர்மானம்: முதல்வர் மு.க.ஸ்டாலின்

சென்னை, ஜூன் 25

ஜாதிவாரி கணக்கெடுப்பை மத்திய அரசு நடத்தக் கோரி இந்த தமிழக சட்டசபை கூட்டத் தொடரிலேயே தீர்மானம் நிறைவேற்றப்படும் என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டசபைக் கூட்டத் தொடர் ஒரு நாள் விடுமுறைக்கு பிறகு தற்போது மீண்டும் தொடங்கியுள்ளது. இன்றைய தினம் பள்ளிக் கல்வித் துறை, உயர்கல்வித் துறை, வருவாய்த் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் நடந்தது.

அப்போது பாமக எம்எல்ஏ ஜி.கே.மணி பேசுகையில், 12, ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் வட மாவட்டங்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளன. எனவே 10.5 சதவீதம் இட ஒதுக்கீடு அமலானால் அந்த பிரச்சினை சரி செய்யப்படும்.

இந்த இடஒதுக்கீட்டுக்கு ஜாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். அது எப்போது எடுக்கப்படும் என்பதை அமைச்சர்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன் என்றார். அப்போது சட்டத் துறை அமைச்சர் ரகுபதி பேசுகையில் 10.5 சதவீத இடஒதுக்கீட்டுக்கு தரவுகள் இல்லை என்பதால் உச்சநீதிமன்றமும் உயர்நீதிமன்றமும் நிலுவையில் வைத்துள்ளது.

10.5 சதவீத இடஒதுக்கீடு குறித்த தரவுகளை சேகரிக்க பாரதிதாசன் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இடஒதுக்கீட்டுக்கு இந்த அரசு எந்த வகையிலும் தடையாக இருக்காது என்றார். அப்போது குறுக்கிட்ட அமைச்சர் சிவசங்கர், விக்கிரவாண்டி இடைத்தேர்தலுக்காகவே 10.5 சதவீத இடஒதுக்கீட்டை பாமக வலியுறுத்துவதாக தெரிவித்திருந்தார்.

இதைத் தொடர்ந்து முதல்வர் ஸ்டாலின் பேசுகையில், ஜாதிவாரி கணக்கெடுப்பை நடத்த மத்திய அரசு அனுமதி அளித்தால்தான் தமிழகத்தில் நடத்த முடியும். எனவே ஜாதிவாரி கணக்கெடுப்பு நடத்த உங்கள் கூட்டணி கட்சியினருடன் பேசுங்கள். மேலும் ஜாதிவாரி கணக்கெடுப்பை மத்திய அரசு விரைந்து நடத்தக் கோரி தமிழக சட்டசபையில் இந்த கூட்டத்தொடரிலேயே தீர்மானம் நிறைவேற்றப்படும். இதற்கு பாமக உறுப்பினர் கோ.க. மணி (ஜி.கே.மணி) ஆதரவு தர வேண்டும் என முதல்வர் பேசியிருந்தார்.

## தஜிகிஸ்தானில் ஹிஜாப் அணிய தடை: மீறினால் அபராதம் விதிக்கப்படும் என எச்சரிக்கை




துசான்பே, ஜூன் 25

மத்திய ஆசிய நாடான தஜிகிஸ்தான் நாட்டில் பெண்கள் ஹிஜாப் அணிய அந்நாட்டு அரசு தடை விதித்துள்ளது. 1991ஆம் ஆண்டு சோவியத்யூனியன் உடைந்தபோது தஜிகிஸ்தான் நாடு உருவானது. இந்த நாட்டில் 1 கோடிப்பேர் வசிக்கும் மக்களில், 96 சதவீதம் பேர் இஸ்லாமியர்களாக உள்ளனர். இந்த நிலையில், தஜிகிஸ்தான் அரசு கல்வித்துறை, கடந்த 2007ஆம் ஆண்டு இஸ்லாமிய மற்றும் மேற்கத்திய உடைகள் ஆகியவற்றை மாணவர்கள் அணிவதற்கு தடை விதித்தது. அப்போதுமுதலே ஹிஜாப் மீதும் நடவடிக்கை எடுக்கத் தொடங்கியது.

அந்த வகையில், தஜிகிஸ்தான் நாட்டில் தற்போது பெண்கள் ஹிஜாப் அணியவும் முக்கியமான பண்டிகைகளைக் கொண்டாடவும் தடை உள்ளிட்ட பல்வேறு மசோதாக்களுக்கு அரசு ஒப்புதல் அளித்தது. தடையை மீறி பெண்கள் ஹிஜாப் அணிந்தால் இந்திய மதிப்பில் ரூ.5 லட்சம் வரை அபராதம் விதிக்கப்படும் என அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

அரசின் இந்த புதிய சட்டங்களை மீறினால் அரசு அதிகாரிகளுக்கு ரூ.3 லட்சமும் மத தலைவர்களுக்கு ரூ.5 லட்சமும் அபராதம் விதிக்கப்படும் எனவும் அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது. இஸ்லாம் மக்கள் அதிகம் வசிக்கும் கொசோவோ, அஜர்பைஜான், கஜகஸ்தான் மற்றும் கிர்கிஸ்தான் உள்ளிட்ட நாடுகளில், பள்ளிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள், அரசாங்க அதிகாரிகளுக்கு புர்கா மற்றும் ஹிஜாபை தடை செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்காவின் பால்டிமோர் பாலம் விபத்து: நாடு திரும்பிய 8 இந்திய மாலுமிகள்



வாஷிங்டன், ஜூன் 25

அமெரிக்காவின் மேரிலாண்ட் மாகாணம் பால்டிமோர் நகரில் படாப்ஸ்கோ ஆற்றின் குறுக்கே 'பிரான்சிஸ் ஸ்காட் கீ' என்ற மிகப்பெரிய பாலம் உள்ளது. 2½ கி.மீ.தூரத்துக்கு 4 வழி பாதையாக அமைந்துள்ள இந்த பாலம் எப்போதும் பரபரப்பாக காணப்படும். கடந்த மார்ச் மாதம் 26ந் தேதி படாப்ஸ்கோ ஆற்றில் சென்ற 'டாலி' என்ற மிகப்பெரிய சரக்கு கப்பல் 'பிரான்சிஸ் ஸ்காட் கீ' பாலம் மீது மோதியது.

இதில் பாலத்தின் பெரும் பகுதி உடைந்து ஆற்றில் விழுந்தது. கப்பலும் பலத்த சேதம் அடைந்தது. இந்த விபத்தில் பாலத்தில் புனரைமப்பு பணிகளில் ஈடுபட்டிருந்த 6 கட்டுமான தொழிலாளர்கள் ஆற்றில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்தனர்.

இதனிடையே விபத்தை ஏற்படுத்திய 'டாலி' சரக்கு கப்பலில் 20 இந்திய மாலுமிகள் இருப்பதாக தகவல் வெளியானது. விபத்தில் அவர்களுக்கு எந்த பாதிப்பு ஏற்படவில்லை என கப்பல் நிறுவனம் தெரிவித்தது. அதே சமயம் விபத்து குறித்து விசாரணை நடத்துவதற்காக மாலுமிகள் அனைவரையும் அமெரிக்காவிலேயே இருக்க போலீசார் உத்தரவிட்டனர்.

இதை தொடர்ந்து கப்பலில் பழுது நீக்கம் பணிகளுக்காக மாலுமிகள் அனைவரும் தொடர்ந்து கப்பலிலேயே தங்க வைக்கப்பட்டனர். அதன்படி கடந்த 3 மாதங்களாக இந்திய மாலுமிகள் விபத்துக்குள்ளான கப்பலில் உள்ளனர்.

இந்த நிலையில் கப்பலில் உள்ள 8 இந்திய மாலுமிகள் அமெரிக்காவை விட்டு வெளியேற நீதிபதிகள் அனுமதி வழங்கினர். இதனையடுத்து அந்த 8 மாலுமிகளும் அமெரிக்காவில் இருந்து இந்தியா திரும்பினர். மற்ற இந்திய மாலுமிகள் 12 பேரும் விசாரணைக்காக தொடர்ந்து அமெரிக்காவிலேயே உள்ளனர்.

## அமெரிக்காவின் பால்டிமோர் பாலம் விபத்து: நாடு திரும்பிய 8 இந்திய மாலுமிகள்




டெல்லி, ஜூன்25

18வது நாடாளுமன்றம் இன்று கூடியது. நாடாளுமன்ற தேர்தலில் பாஜக கூட்டணிவெற்றிபெற்றுஆட்சியமைந்தபின்முதல்முறையாகநாடாளுமன்றம் இன்று கூடியுள்ளது. நாடாளுமன்றத்தில் எம்.பி.க்களுக்கு பதவிப்பிரமாணம் செய்துவைக்கப்பட உள்ளது.

இந்நிலையில், நாடாளுமன்றம் கூடுவதற்கு முன்பு பிரதமர் மோடி செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது, நாட்டு மக்கள் எங்களுக்கு பணியாற்ற 3வது முறையாக வாய்ப்பு அளித்துள்ளனர். இது சிறந்த, மிகப்பெரிய வெற்றி. எங்கள் பொறுப்பு 3 மடங்கு அதிகரித்துள்ளது. எங்கள் 3வது ஆட்சியில் நாங்கள் 3 மடங்கு கடினமாக உழைப்போம் என்பதை நாட்டு மக்களுக்கு உறுதியாக கூறுகிறேன்.

நாட்டு மக்கள் எதிர்க்கட்சிகளிடமிருந்து நல்ல நடவடிக்கைகளை எதிர்பார்க்கின்றனர். ஜனநாயகத்தின் மரபை காத்து மக்களின் எதிர்பார்ப்புகளை எதிர்க்கட்சிகள் நிறைவேற்றும் என்று நம்புகிறேன். நாடகம், இடையூறுகளை மக்கள் எதிர்பார்க்கவில்லை. அமளி, கோஷங்களையும் மக்கள் விரும்பவில்லை. நாடாளுமன்றத்தை வழிநடத்த ஒத்துழைப்பு அவசியம். நாட்டிற்கு சிறந்த, பொறுப்பான எதிர்க்கட்சி அவசியம்

இவ்வாறு அவர் கூறினார்.

# காசு கொடுத்து வாங்கிய மதுவை இப்படி ஊற்றுகிறீர்களே.. கட்டிங் கேட்ட மதுப்பிரியர் : பா ஜனதாவினர் நடத்திய போராட்டத்தில் ருசிகரம்



கும்பகோணம், ஜூன் 25

கள்ளக்குறிச்சி சம்பவத்தில் தமிழக அரசை கண்டித்து தஞ்சை வடக்கு மாவட்ட பா.ஜனதா கட்சியினர் கும்பகோணத்தில் நேற்று முன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது அவர்கள் டாஸ்மாக் மதுவை வாங்கி கழிவு நீர் வாய்க்காலில் கொட்டி மதுவை கைவிடுங்கள் என வலியுறுத்தி கோஷம் எழுப்பினர். பா ஜனதாவினர் தீவிரமாக போராட்டத்தில் ஈடுபட்ட போது மதுப்பிரியர் ஒருவர் செய்த செயல் சிரிப்பலையை ஏற்படுத்தி உள்ளது.

கும்பகோணம் புதிய பஸ் நிலையம் அருகே உள்ள கழிவுநீர் வாய்க்காலில் பா ஜனதா கட்சியினர் டாஸ்மாக் கடையில் வாங்கிய மதுவை வரிசையாக நின்று ஊற்றினர். அப்போது இதைக்கண்டு ஆதங்கம் அடைந்த மதுப்பிரியர் ஒருவர் காசு கொடு'த்து வாங்கிய மதுவை இப்படி கழிவுநீர் வாய்க்காலில் ஊற்றுகிறீர்களே, அதை என்னிடம் கொடுங்கள் என கேட்பது போல சைகை செய்து பா ஜனதா கட்சியினரிடம் மதுபாட்டில்களை கேட்டார். ஆனால் இதை பொருட்படுத்தாத பா ஜனதாகட்சியினர்மதுவை கழிவுநீர் வாய்க்காலில் ஊற்றினர்.

பின்னர் ஒருவழியாக அந்த நபர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் இருந்து ஒரு மதுபாட்டிலை வாங்கி கொண்டு அந்த இடத்தில் இருந்து நகர்ந்து சென்றார். மதுவுக்கு எதிராக பா ஜனதா கட்சியினர் தீவிரமாக பேராராட்டம் நடத்திக் கொண்டிருந்த போது மதுப்பிரியா' ஒருவர் போராட்டத்தின் தீவிரத்தை உணராமல் கால்வாயில் ஊற்றிய மதுவை கேட்டு கெஞ்சிய வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

# கல்வராயன்மலையில் மாயமான 7 போலீசாரும் இருப்பிடம் திரும்பினர்: காவல்துறை தகவல்



கள்ளக்குறிச்சி, ஜூன் 25

கள்ளக்குறிச்சி மாவட்டம், கருணாபுரம் கிராமத்தில் விஷ சாராயம் குடித்த 50க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். மேலும் 100க்கும் மேற்பட்டோர் கள்ளக்குறிச்சி, சேலம், விழுப்புரம், புதுச்சேரி ஜிப்மர் ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். சிலர் கவலைக்கிடமாக இருப்பதால் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது. இந்த சம்பவம் தமிழகத்தையே பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

இது தொடர்பாக சி.பி.சி.ஐ.டி. போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். இது ஒருபுறம் இருக்க, கல்வராயன் மலையில் தமிழ்நாடு சிறப்பு காவல் படை, பட்டாலியன் போலீசார் உள்ளிட்ட போலீசார், சாராயம் தயாரிக்கும் ஊறல்களை அழிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். கல்வராயன் மலையில் முகாமிட்ட சாராய வியாபாரிகளை கைது செய்யவும் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இதற்கிடையில்கல்வராயன் மலையில் சாராய வேட்டைக்கு சென்ற திருச்சி பட்டாலியன் போலீசார் ஏழு பேர் மாயமாகினர். அடர்ந்த காட்டுப்பகுதியில் வழிமாறி சென்றிருக்கலாம் என சக போலீசார் தெரிவித்தனர். வனப்பகுதிக்குள் மாயமான 7 போலீசாரை சக போலீசார் தீவிரமாக தேடி வந்தனர்.

இந்த நிலையில், கல்வராயன்மலையில் மாயமானதாககூறப்பட்ட 7 போலீசாரும்பத்திரமாகமீண்டும் இருப்பிடம் திரும்பிவிட்டனர் என்று கள்ளக்குறிச்சி மாவட்ட காவல்துறை அறிவித்துள்ளது. இது குறித்து காவல் துறை தரப்பில் கூறுகையில், 7 போலீசாரும்சாராய வேட்டையை முடித்துவிட்டு சிறிது நேரம் ஓய்வெடுத்துள்ளனர். பின்னர் இருப்பிடம் திரும்பினர்; அனைவரும் நலமாக உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மனைவியுடனான கள்ளத்தொடர்பை கண்டித்ததால் வெட்டிக்கொல்லப்பட்ட ரவுடி



மீஞ்சூர், ஜூன் 25

திருவள்ளூர் மாவட்டம் மீஞ்சூர் அருகே தோட்டக்காடு மேட்டு காலனியை சேர்ந்தவர் விஷ்ணு (வயது 24). பிரபல ரவுடியான இவர் மீஞ்சூர் போலீஸ் நிலைய சரித்திர பதிவேடு குற்றவாளி ஆவார். இவரது நண்பரும், கூட்டாளியுமான பொன்னேரி அடுத்த சின்னகாவனம் கிராமத்தை சேர்ந்தவர் லட்சுமணன் (26). இவரும் பிரபல ரவுடி ஆவார்.

இந்நிலையில் விஷ்ணு கூட்டாளியை சந்திக்க சின்னகாவனம் வரும்போது லட்சுமணனின் மனைவியுடன் பழக்கம் ஏற்பட்டு நாளடைவில் அது கள்ளக்காதலாக மாறியதாக கூறப்படுகிறது.

இந்த கள்ளக்காதல் விவகாரம் லட்சுமணனுக்கு தெரியவரவே அவருக்கும் மனைவிக்கும் குடும்ப தகராறு ஏற்பட்டது. பின்னர் விஷ்ணு தோட்டக்காடு கிராமத்திற்கு நேற்று இரவு சென்றார். அங்கு லட்சுமணனும் சென்ற நிலையில் அவர்களுடன் சேர்ந்து மது அருந்தியதாக தெரிகிறது. அப்போது மனைவியுடனான கள்ளக்காதல் குறித்து விஷ்ணுவிடம், லட்சுமணன் தட்டிக்கேட்டதால் இருவருக்கும் இடையே தகராறு ஏற்பட்டது.

இதனால் ஆத்திரமடைந்த விஷ்ணு மற்றும் அவரது கூட்டாளிகள் சேர்ந்து தாங்கள் மறைத்து வைத்திருந்த பட்டாக்கத்தியால் லட்சுமணனை சரமாரியாக வெட்டினர். இதைத்தொடர்ந்து, அந்த கும்பல் அப்பகுதியில் தப்பி ஓடினர். அதில் காயம் அடைந்த லட்சுமணன் ரத்த வெள்ளத்தில் சம்பவ இடத்திலேயே துடிதுடித்து பரிதாபமாக இறந்தார்.

மேலும் இச்சம்பவத்தால் அப்பகுதியில் பதற்றம் ஏற்படவே போலீசார் அங்குகுவிக்கப்பட்டனர்.. இதையடுத்து கொலை சம்பவத்தில் ஈடுபட்டு தலைமறைவான விஷ்ணு மற்றும் அவரது கூட்டாளிகளை கொண்ட 5 பேர் கொண்ட கும்பலை போலீசார் தேடி வருகின்றனர்.

இது குறித்து மீஞ்சூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வரும் நிலையில் தோட்டக்காடு பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

# திருச்செந்தூர் கடற்கரையில் 5 சவரன் தங்க செயினை தவறவிட்ட பக்தர்: தேடி கண்டுபிடித்த கடல் பாதுகாப்பு குழுவினர்



திருச்செந்தூர், ஜூன் 26

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில் கடற்கரையில் புனித நீராடும்போது பெண் ஒருவர் தனது 5 சவரன் தங்க செயினை தவறவிட்டார். இது தொடர்பாக அந்த பெண் போலீசாரிடம் தகவல் தெரிவித்துள்ளார். இதையடுத்து போலீசார் சிப்பி அரிக்கும் தொழிலாளர்கள் மற்றும் கடற்கரை பாதுகாப்பு குழுவினரை வரவழைத்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

50க்கும் மேற்பட்டோர் ஒன்று சேர்ந்து தேடிய நிலையில், கடல் பாதுகாப்பு பணியாளர் வேலுச்சாமி என்பவர் அந்த செயினை கண்டுபிடித்தார்.

இதையடுத்து அந்த பெண்ணிடம் தங்க செயினைதிருப்பி கொடுத்தனர். தங்க செயினை கண்டுபிடித்து கொடுத்த குழுவினருக்கு பாராட்டுகள் குவிந்து வருகிறது.

# தமிழக மீனவர்களை விடுக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்: துரை வைகோ வலியுறுத்தல்



சென்னை, ஜூன் 25

ம.தி.மு.க. முதன்மை செயலாளர் துரை வைகோ வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

இலங்கை கடற்படையினரால் ராமேஸ்வரத்தை சேர்ந்த தமிழக மீனவர்கள் 22 பேர் கைது செய்யப்பட்டதோடு, அவர்களின் 3 விசைப்படகுகளும் சிறை பிடிக்கப்பட்டுள்ளது. கடந்த வாரம் ஜெகதாப்பட்டினத்தை சேர்ந்த 4 மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டதோடு, ஒரு விசைப்படகும் சிறை பிடிக்கப்பட்டது.

மத்திய பா.ஜனதா அரசு இந்த பிரச்சினையில் தீவிர கவனம் செலுத்தி, கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களையும், விசைப்படகுகளையும் விடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழக அரசும், மத்திய அரசுக்கு உரிய அழுத்தம் கொடுத்து, தமிழக மீனவர்களின் பிரச்சினைக்கு நிரந்த தீர்வு காண வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# விஷம் குடித்து கணவர் கவலைக்கிடம்... மனைவி தூக்குப்போட்டு தற்கொலை... குடும்ப தகராறில் விபரீதம்



சேலம், ஜூன் 25

சேலம் மாவட்டம் தாரமங்கலம் அருகே தொட்டம்பட்டி பகுதியை சேர்ந்தவர் பூபாலன் (வயது 22). இவர் தோப்பூர் பகுதியில் துரித உணவகம் நடத்தி வருகிறார். பூபாலன் கடந்த ஓராண்டுக்கு முன்பு பூக்கார வட்டம் பகுதியை சேர்ந்த உறவினர் மகளான மேகலா (21) என்பவரை காதலித்து திருமணம் செய்து கொண்டார். கணவன் மனைவி இடையே தகராறு ஏற்பட்டது.

இதனால் மனவேதனை அடைந்த பூபாலன் வீட்டில் இருந்த பூச்சிக்கொல்லி மருந்தை எடுத்து குடித்து விட்டார். அவரை உறவினர்கள் மீட்டு சிகிச்சைக்காக சேலம் அரசு ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அங்கு அவருக்கு டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர். அவரது உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளதாக தெரிகிறது. ஆஸ்பத்திரியில் கணவரை உடன் இருந்து கவனித்து வந்த மேகலா திடீரென மாயமானார்.

அவரை உறவினர்கள் பல்வேறு இடங்களில் தேடி வந்தனர். அப்போது பழைய புறநோயாளிகள் சிகிச்சை பிரிவு கட்டிடம் அருகே உள்ள ஒரு மரத்தில் மேகலா தனது துப்பட்டாவில் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டதாக தெரிகிறது. இதை பார்த்து உறவினர்கள் அதிர்ச்சி அடைந்தனர். தகவல் கிடைத்ததும் ஆஸ்பத்திரி போலீசார் அங்கு விரைந்து சென்றனர்.

தற்கொலை செய்த மேகலாவின் உடலை மீட்டு பிரேத பரிசோதனை கூடத்துக்கு அனுப்பி வைத்தனர். அவரது உறவினர்கள் ஆஸ்பத்திரியை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர். அப்போது போலீசாருக்கும், அவர்களுக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

இதுகுறித்து உறவினர்கள் கூறும்போது, கணவரின் உடல்நிலை குறித்து டாக்டர்கள் எங்களிடம் கூறாமல் மேகலாவிடம் ஏன்? தெரிவித்தனர். கணவர் இறந்துவிடுவார் என்ற அச்சத்தில் அவர் மனமுடைந்து தற்கொலை செய்து கொண்டார். எனவே அந்த டாக்டர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

இதையடுத்து அவர்களிடம் போலீசார் பேச்சு வார்த்தை நடத்தினர். தொடர்ந்து அவர்கள் அங்கிருந்து கலைந்து சென்று கலெக்டர் அலுவலகம் முன்பு திரண்டனர். அங்கு அவர்களிடம் போலீஸ் உதவி கமிஷனர் ஹரிசங்கரி மற்றும் போலீசார் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் ஆஸ்பத்திரியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

# போக்குவரத்து பெண் சார்பு ஆய்வாளரை தகாத வார்த்தையால் திட்டியதாக சிவகங்கை பா.ஜ.க. தலைவர் கைது



சிவகங்கை, ஜூன் 25

போக்குவரத்து பெண் சார்பு ஆய்வாளரை தகாத வார்த்தையால் திட்டியதாக சிவகங்கை நகர பா.ஜ.க. தலைவர் கைது செய்யப்பட்டுள்ள சம்பவம் பெரும் பரபரப்பைஏற்படுத்தியுள்ளது.

சிவகங்கைநகரபா.ஜ.க. தலைவராக இருப்பவர் உதயா. இவர் இன்று காலை காரில் சென்ற போது, சீட் பெல்ட் அணியாமல் பயணித்ததாக கூறப்படுகிறது. இந்த நிலையில் அப்போது அந்த பகுதியில் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்த போக்குவரத்து பெண் சார்பு ஆய்வாளர் அழகு ராணி சீட் பெல்ட் அணியாதது குறித்து கேள்வி எழுப்பியுள்ளார்.

இதையடுத்து இது தொடர்பாக உதயாவுக்கும் சார்பு ஆய்வாளர் அழகு ராணிக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. அப்போது உதயா, அழகு ராணியை தகாத வார்த்தைகளால் திட்டியதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் உதயா தகாத வார்த்தைகளால் திட்டியதாக வீடியோ ஆதாரத்துடன் சார்பு ஆய்வாளர் அழகு ராணி புகார் அளித்துள்ளார்.

புகாரின் அடிப்படையில் அவரை போலீசார் கைது செய்தனர். இதையடுத்து சிவகங்கை காவல் நிலையம் முன்பு பா.ஜ.க. நிர்வாகிகள் குவிந்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

# 'சென்னை காளிகாம்பாள் கோவில் அறங்காவலர் தேர்தலை ரத்து செய்ய முடியாது': ஐகோர்ட்டு



சென்னை, ஜூன் 25

சென்னை பாரிமுனையில் உள்ள காளிகாம்பாள் கோவில் அறங்காவலர் தேர்தல் முறையாக நடத்தப்படவில்லை என்றும் தேர்தலை ரத்து செய்ய வேண்டும் என்றும் கூறி தேவஸ்தான உறுப்பினர் ஜெயராஜகோபால், சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கு நீதிபதி பி.பி.பாலாஜி முன்பு விசாரணைக்கு வந்தது.

அப்போது தேர்தல் முறையாக நடந்துள்ளதால், தேர்தலை ரத்து செய்யக்கோர முடியாது என கோவில் அறங்காவலர்கள் தரப்பில் வாதிடப்பட்டது. இந்த வழக்கு விசாரணைக்கு உகந்ததல்ல என அரசு தரப்பில் வலியுறுத்தப்பட்டது. அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, தேர்தலை ரத்து செய்ய முடியாது என உத்தரவிட்டார். மேலும் அறநிலையத்துறை சட்டப்படி, அறங்காவலர்களை தகுதி நீக்கம் செய்ய சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம்தான் முறையிட வேண்டும் என்பதால், வழக்கு விசாரணைக்கு உகந்ததல்ல எனக்கூறி மனுவை நீதிபதி தள்ளுபடி செய்தார்.

# ஆர்டர் செய்த டிசைனில் நகைகள் இல்லாததால் ஆத்திரம் நகைப்பட்டறை தொழிலதிபரை கடத்திய கும்பல்

கோவை, ஜூன் 25

கோவை ஆர்.எஸ். புரத்தைச் சேர்ந்தவர் செந்தில்குமார். தங்க நகைப்பட்டறை நடத்தி வரும் இவர், தன் சகோதரி மகன்விஷ்ணுவாசனையும் நகைப்பட்டறையில் வேலைக்கு வைத்து தொழில் செய்து வந்தார். கடந்த 17ம் தேதி செந்தில்குமார் மற்றும் விஷ்ணுவாசன் இருவரும் தங்களின் வளர்ப்பு நாயுடன் காரில் சென்றுகொண்டிருந்த போது மர்ம நபர்களால் வழிமறித்து கடத்தப்பட்டதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் செந்தில்குமாரின் உறவினர்களை வாட்ஸ்அப் கால் மூலம் தொடர்பு கொண்ட கும்பல், தாங்கள் ஆர்டர் செய்த தங்க நகைகளை கேட்ட டிசைனில் தரவில்லை என்றும், நகைகள் நேர்த்தியாக இல்லையெனவும் கூறிய நிலையில், 47 லட்சம் ரூபாய் கேட்டு மிரட்டியதாக கூறப்படுகிறது.

உடனடியாக இது குறித்து போலீசில் புகாரளிக்கப்பட்டது.

விசாரணையில், சிவகங்கையைச் சேர்ந்த தனபால் மற்றும் தனசேகர் ஆகிய இருவர், மங்கையர்க்கரசி என்ற பெண்ணுக்கு ஆர்டர் செய்த வளையலுக்காக தொழிலதிபரை கடத்தியது தெரியவந்தது.

இந்த நிலையில், சிவகங்கையில் உள்ள ஒரு வீட்டில் இருந்து நகைக்கடை தொழிலதிபரையும் மற்றும் அவரது சகோதரி மகனையும் மீட்ட போலீசார் கடத்தலுக்கு உதவிய 6 பேரை கைது செய்தனர். மேலும் தலைமறைவாக உள்ள முக்கிய குற்றவாளிகளாக கருதப்படும் தனபால், தனசேகர் மற்றும் மங்கையர்க்கரசியை தேடி வருகின்றனர்.

# 'பராமரிப்பில் தொடர்ந்து அலட்சியம் காட்டும் ரெயில்வே துறை': மதுரை ஐகோர்ட்டு கிளை அதிருப்தி

மதுரை, ஜூன் 25

தஞ்சாவூரைச் சேர்ந்த மாற்றுத்திறனாளியான சுந்தர விமலநாதன் என்பவர் மதுரை ஐகோர்ட்டு கிளையில் தாக்கல் செய்த மனுவில், ரெயில்களில் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் சலுகைகளை பெறுவதற்காக வழங்கப்படும் அடையாள அட்டையை பரிசோதிக்கும் முறை டிஜிட்டல் மயமாக்கப்பட்டு விட்டதாகவும்,

ஆனால் தமிழகத்தில் மதுரை, திருச்சி, சேலம் உள்ளிட்ட ரெயில் நிலையங்களில் இந்த நடைமுறை அமல்படுத்தப்படாததால் தன்னைப் போன்ற மாற்றுத் திறனாளிகள் பாதிக்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த மனு மதுரை ஐகோர்ட்டு கிளை பொறுப்பு தலைமை நீதிபதி ஆர்.மகாதேவன், நீதிபதி ஜி.ஆர்.சாமிநாதன் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது இது குறித்து கேள்வி எழுப்பிய நீதிபதிகள், ரெயில் பெட்டிகள் முறையாக பராமரிக்கப்படுவதில்லை என குற்றம் சாட்டினர்.

தமிழகத்தில் ஓடும் ஏராளமான ரெயில்களில் ஒட்டை உடைசல் பெட்டிகள்தான் இணைக்கப்படுவதாகவும், கட்டணங்கள் அதிகரிக்கப்பட்ட போதிலும் பராமரிப்பில் ரெயில்வே துறை தொடர்ந்து அலட்சியம் காட்டி வருவதாகவும் நீதிபதிகள் அதிருப்தி தெரிவித்துள்ளனர். மேலும் இந்த வழக்கு குறித்து ரெயில்வே தரப்பில் பதிலளிக்க வேண்டும் என உத்தரவிட்ட நீதிபதிகள், வழக்கு விசாரணையை ஜூலை 8ந்தேதிக்கு ஒத்தி வைத்தனர்.

# சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த தொழிலாளி; போன் நம்பர் கேட்டும் தொந்தரவு

திருப்பூர், ஜூன் 25

திருப்பூர் மாவட்டம் சாமுண்டிபுரம் பகுதியை சேர்ந்தவர் சாதிக் பாட்ஷா (வயது 51).

தொழிலாளியான இவர் 10ம் வகுப்பு படிக்கும் 15 வயது சிறுமியுடன் பேசி பழகியுள்ளார்.

அந்த சிறுமி தனியாக இருந்தபோது பாலியல் தொந்தரவு கொடுத்துள்ளார்.

தொடர்ந்து, தொலை பேசி எண்ணை கேட்டும், தன்னிடம் பேச வேண்டும் எனவும் சிறுமிக்கு தொந்தரவு கொடுத்து வந்துள்ளார்.

இதுகுறித்து சிறுமியின் பெற்றோர் வடக்கு மகளிர் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்ததின் பேரில், சாதிக் பாட்ஷாவை போக்சோ பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்து போலீசார் கைது செய்தனர்.

# காரில் கடத்தப்பட்ட இளம்பெண்... விசாரணையில் திடீர் திருப்பம்

தேனி, ஜூன் 25

மதுரை எஸ்.எஸ்.காலனியில் நேற்று முன்தினம் பட்டப்பகலில் 35 வயது மதிக்கத்தக்க ஒரு பெண்ணை சிலர் காரில் கடத்தி செல்வதாக மதுரை மாவட்ட போலீசாருக்கு தகவல் கிடைத்தது.

மேலும் தகவல் கொடுத்த நபர், கடத்திய போது எடுத்ததாக புகைப்படங்களையும் போலீசாருக்கு அனுப்பியதாக கூறப்படுகிறது. அதன்பேரில் போலீசார் அந்த கார் சென்ற பகுதிகளை சி.சி.டி.வி. கேமராக்கள் உதவியுடன் கண்காணித்தனர். அப்போது அந்த கார் தேனியை நோக்கி செல்வது தெரியவந்தது.

இதையடுத்து மதுரை மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு அலுவலகத்தில் இருந்து தேனி மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு அலுவலகத்துக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன்பேரில் ஆண்டிப்பட்டி, க.விலக்கு போலீசார் உஷார்படுத்தப்பட்டனர். மேலும் சம்பந்தப்பட்ட காரில் வந்தவர்களை பிடிக்க தேனி மாவட்டம் போலீசார் முடுக்கி விடப்பட்டனர்.

இந்தநிலையில் தேனி போலீஸ் இன்ஸ்பெக்டர் உதயகுமார் தலைமையிலான போலீசார், மதுரை சாலையில் ரோந்து சென்றனர்.

அப்போது தொழிற்பேட்டை அருகில் சந்தேகப்படும்படி 2 பேர் நின்று கொண்டிருந்தனர். அவர்களை பிடித்து விசாரித்தபோது, பெண்ணை கடத்தியதாக கூறப்பட்ட கும்பலை சேர்ந்தவர்கள் என்று தெரியவந்தது.

அவர்களிடம் தொடர்ந்து விசாரணை நடத்தியபோது, அவர்கள் வந்த கார் விபத்தில் சிக்கியதால் வேறு இடத்தில் நிறுத்தி வைத்து இருப்பதாகவும், சம்பந்தப்பட்ட பெண்ணை பூதிப்புரத்தில் உள்ள ஒரு வீட்டில் வைத்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

இதனையடுத்து பூதிப்புரத்துக்கு போலீசார் விரைந்தனர். அங்கு ஒரு வீட்டில் கடத்தப்பட்டதாக கூறப்பட்ட அந்த பெண்ணை மீட்டனர். மேலும் கடத்தியதாக பெண் உள்பட மேலும் 2 பேரை போலீசார் பிடித்தனர். மீட்கப்பட்ட பெண், பிடிப்பட்ட பெண் உள்பட 4 பேரிடமும் போலீசார் விசாரணை நடத்தினர்.

அப்போது திடீர் திருப்பமாக, கடத்தப்பட்டதாக கூறப்பட்ட பெண், தன்னை அவர்கள் கடத்தி வரவில்லை என்று கூறினார். அதைக்கேட்டு போலீசார் அதிர்ச்சி அடைந்தனர். மேலும் விசாரணையில், கடத்தப்பட்டதாக கூறப்பட்ட பெண்ணுக்கும், கடத்தியதாக கூறப்பட்ட நபர்களுக்கும் இடையே பணம் கொடுக்கல், வாங்கல் உள்ளது.

அந்த பிரச்சினையில் பணத்தை வசூலிப்பதற்காக அந்த பெண்ணை தேனிக்கு காரில் அழைத்து வந்ததாக கூறினர். இருப்பினும் அவர்கள் முன்னுக்குப் பின் முரணாக தகவல்களை கூறியதாக தெரிகிறது.

இதற்கிடையே இந்த தகவல் அறிந்ததும் மதுரையில் இருந்து தனிப்படை போலீசார் தேனிக்கு வந்தனர். பின்னர் மதுரை போலீசாரிடம், கடத்தப்பட்டதாக கூறப்பட்ட பெண் மற்றும் கடத்தியதாக பிடிபட்ட 4 பேரையும் போலீசார் ஒப்படைத்தனர். அவர்களை போலீசார் விசாரணைக்காக மதுரைக்கு அழைத்து வந்தனர்.

# வீட்டுப்பாடம் எழுத உதவியதில் நெருக்கம்... பிளஸ்2 மாணவனுடன் அறை எடுத்து தங்கிய ஆசிரியை

விருதுநகர், ஜூன் 25

விருதுநகர் மாவட்டம் காரியாபட்டி பகுதியை சேர்ந்த 17 வயது மாணவர் ஒருவர் தனியார் பள்ளியில் 12ம் வகுப்பு படித்து முடித்தார். இந்தநிலையில் திடீரென அந்த மாணவர் மாயமானார். இதுகுறித்து மாணவரின் தந்தை ஆவியூர் போலீசில் புகார் அளித்தார். இதையடுத்து போலீசார் நடத்திய விசாரணையில் அதிர்ச்சி தகவல்கள் தெரியவந்தன.

அந்த மாணவர் படித்த பள்ளியில் கணினி அறிவியல் ஆசிரியையாக பணியாற்றியவர் பாத்திமாகனி (வயது40). இவர் மதுரை வில்லாபுரம் பகுதியை சேர்ந்தவர். இவருக்கும், அந்த மாணவருக்கும் பழக்கம் இருந்து வந்ததாக கூறப்படுகிறது.

பாத்திமா கனிக்கு திருமணமாகி 2 குழந்தைகள் உள்ளனர். அந்த மாணவன் பிளஸ்2 படித்த போது, வீட்டு பாடங்களை சரிவர எழுதி வராமல் இருந்துள்ளார்.

இதையடுத்து அந்த மாணவனுக்கு வீட்டுப்பாடங்கள் எழுத பாத்திமா கனி உதவியுள்ளார். இது அவர்களுக்கு நெருக்கத்தை ஏற்படுத்தியதாக கூறப்படுகிறது. இதையறிந்த பள்ளி நிர்வாகம், மதுரை மாவட்டம் மேலூரில் உள்ள மற்றொரு பள்ளிக்கு, பாத்திமாகனி மாற்றப்பட்டார். ஆனால், அவர் அந்த பள்ளிக்கு செல்லாமல் வீட்டில் இருந்து வந்துள்ளார்.

இதையடுத்து வீட்டை விட்டு வெளியே வந்த அந்த மாணவனும், ஆசிரியையும் புதுச்சேரிக்கு சென்றனர். அவர்கள் அங்கிருப்பதை அறிந்த போலீசார், புதுச்சேரி சென்று அவர்கள் இருவரையும் பிடித்து விசாரணை நடத்தினர். விசாரணையில் 4 நாட்களாக புதுச்சேரி பகுதியில் ஆசிரியை பாத்திமா கனியும், மாணவனும் அறை எடுத்து தங்கி இருந்ததும், மாணவனை கல்லூரியில் சேர்க்க முயன்றதும் தெரியவந்தது. ஆசிரியை பாத்திமாகனியை போக்சோ சட்டத்தின் கீழ் போலீசார் கைது செய்தனர்.

# காதல் தோல்வியால் விரக்தி... விமானத்துக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்த பட்டதாரி வாலிபர்

சென்னை, ஜூன் 25

இண்டிகோ விமான நிறுவனத்தின் வாடிக்கையாளர் சேவை மையம் சென்னை பெரும்பாக்கத்தில் உள்ளது. இந்த அலுவலகத்துக்கு கடந்த 18ம் தேதி இரவு 8.45 மணியளவில் இமெயில் வாயிலாக தகவல் ஒன்று வந்தது. அந்த இமெயிலில், சென்னையில் இருந்து மும்பை செல்லும் விமானத்தில் வெடிகுண்டு வைக்கப்பட்டுள்ளதாகவும், அந்த வெடிகுண்டு இரவு 9.45 மணிக்கு வெடிக்கும் என்றும் அதிர்ச்சி தகவல் தெரிவிக்கப்பட்டு இருந்தது.

உடனடியாக, இந்த தகவல் சென்னை விமான நிலைய அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டது. குறிப்பிட்ட அந்த விமானத்தில் வெடிகுண்டு சோதனை நடத்தப்பட்டது. ஆனால், வெடிகுண்டு எதுவும் சிக்கவில்லை. அது மிரட்டல்தகவல் என்றும் தெரிய வந்தது.

இந்த சம்பவம் தொடர்பாக இண்டிகோ விமானத்தின் வாடிக்கையாளர் சேவை மையம் சார்பில் சென்னை போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் புகார் மனு கொடுக்கப்பட்டது. போலீஸ் கமிஷனர் சந்தீப் ராய் ரத்தோர் உத்தரவின் பேரில் சென்னை மத்திய குற்றப்பிரிவின் சைபர் கிரைம் போலீஸ் இன்ஸ்பெக்டர் புஷ்பராஜ் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினார்.

விசாரணையில் தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறில் இருந்து இந்த வெடிகுண்டு மிரட்டல் தகவல் அனுப்பப்பட்டது தெரிய வந்தது. உடனடியாக அதிரடி நடவடிக்கையில் ஈடுபட்டு, பிரசன்னா



(வயது 27) என்ற வாலிபரை நேற்று கைது செய்தனர். பி.காம் பட்டதாரியான இவர் வேலை தேடி வந்தார். இவரது தந்தை வெங்கட்ராமன் ஓய்வு பெற்ற தபால் அதிகாரி.

சென்னை பெரம்பூரில் உள்ள உறவுப்பெண்ணை பிரசன்னா காதலித்ததாக தெரிகிறது. அந்த பெண் இவரது காதலை ஏற்றுக் கொள்ளவில்லை. இதையொட்டி, பிரசன்னா தான் காதலித்த பெண்ணின் குடும்பத்தார் மீது கோபப்பட்டு, அவர்களை போலீசில் மாட்டி விடுவதற்காக, அவர்களின் பெயரை பயன்படுத்திவெடிகுண்டு மிரட்டலில் ஈடுபட்டதும் போலீஸ் விசாரணையில் தெரிய வந்தது. போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் பிரசன்னா இந்த தகவலை தெரிவித்து உள்ளார்.

திருவையாறில் கைது செய்யப்பட்டு, நேற்று சென்னை அழைத்து வரப்பட்ட பிரசன்னா, தீவிர விசாரணைக்கு பிறகு நீதிமன்ற காவலில் சிறையில் அடைக்கப்பட்டதாக போலீசார் தெரிவித்தனர். இது போல் மிரட்டலில் ஈடுபடுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று போலீசார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# பம்பு செட்டில் குளித்துக்கொண்டிருந்தபோது மின்கம்பி அறுந்து விழுந்து 2 சிறுவர்கள் பலி

விழுப்புரம், ஜூன் 25

விழுப்புரம் மாவட்டம் தடுத்தாட்கொண்டூர் கிராமத்தை சேர்ந்த சிறுவர்கள் லோகேஷ், சப்தகிரி. இதில் சிறுவன் சப்தகிரி 6ம் வகுப்பும், சிறுவன் லோகேஷ் 3ம் வகுப்பும் படித்து வருகின்றனர்.

இந்நிலையில், சிறுவர்கள் இருவரும் கிராமத்தில் உள்ள பம்பு செட்டில் இன்று மாலை குளிக்க சென்றனர். இருவரும் பம்பு செட்டில்





குளித்துக்கொண்டிருந்த போது எதிர்பாராத விதமாக மின்கம்பி அறுந்து தண்ணீரில் விழுந்தது.

இதில் பம்பு செட்டில் குளித்துக்கொண்டிருந்த சிறுவர்கள் மீதும் மின்சாரம் பாய்ந்தது. இந்த சம்பவத்தில் சிறுவர்கள் இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

இதுகுறித்து தகவலறிந்த போலீசார், விரைந்து வந்து உயிரிழந்த சிறுவர்களின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், இச்சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கொள்ளிடம் ஆற்றில் மாயமான 10ம் வகுப்பு மாணவன்; 3வது நாளாக தேடும் பணி தீவிரம்

திருச்சி, ஜூன் 25

திருச்சி மேலப்புதூர் பகுதியைச் சேர்ந்த 10ம் வகுப்பு மாணவர் சாம் ரோஷன். இவர் விடுமுறை நாள் என்பதால் ஸ்ரீரங்கம் திருவானைக்காவல் அருகே உள்ள கொள்ளிடம் ஆற்றின் புதிய தடுப்பணை பகுதியில் தனது நண்பர்களுடன் குளிப்பதற்காக சென்றுள்ளார். அப்போது எதிர்பாராத விதமாக நீரில் மூழ்கி ரோஷன் மாயமானார்.



இது குறித்து அப்பகுதி மக்கள்தீயணைப்புத்துறை மற்றும் காவல்துறைக்கு தகவல் தெரிவித்தனர். இதையடுத்து சுமார் 15க்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் மாயமான சிறுவனை தேடும் பணியில் ஈடுபட்டனர். நேற்று மதியம் 2 மணி முதல் மாலை 6.30 மணி வரை நடைபெற்ற தேடுதல் பணியானது போதிய வெளிச்சமில்லாத காரணத்தால் தற்காலிகமாக கைவிடப்பட்டது.

தொடர்ந்து 2வது நாளாக இன்று காலை 5.30 மணிக்கு மீண்டும் தேடுதல் பணி தொடங்கப்பட்டது. டிரோன் கேமரா உதவியுடன், ஸ்கூபாடைவிங் வீரர்கள் வரவழைக்கப்பட்டு மாயமான சிறுவனை தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

# குழந்தையின் பிறந்தநாள் விவகாரம்.. விவாகரத்து பெற்ற தம்பதி வழக்கில் ஐகோர்ட்டு நூதன உத்தரவு

சென்னை, ஜூன் 25

சென்னையைச் சேர்ந்த தம்பதி பிரேம்மாலா. இவர்களுக்கு 4 வயது மகள் உள்ளார். இந்தநிலையில் கணவன், மனைவிக்கு இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இதையடுத்து சென்னை குடும்ப நல கோர்ட்டில் வழக்கு தொடர்ந்து விவாகரத்து வாங்கினர்.

அந்த தீர்ப்பில், 'குழந்தையை அதன் தந்தை, ஒவ்வொரு மாதமும் முதல் மற்றும் 3ம் சனிக்கிழமைகளில் காலை 10 மணி முதல் 12 மணி வரை குடும்பநல கோர்ட்டு வளாகத்தில் உள்ள குழந்தைகள் காப்பகத்தில் வைத்து பார்க்கலாம்' என்று கூறப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தனது குழந்தையை பிரேம் பார்ப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து சென்னை ஐகோர்ட்டில் மாலா வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கு, நீதிபதி சி.வி.கார்த்திகேயன் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, பிரேம் சார்பில் ஆஜரான வக்கீல் டி.பிரசன்னா, 'குடும்ப நல நீதிமன்ற உத்தரவை மாலா அமல்படுத்துவதில்லை. குழந்தையை பிரேம் பார்ப்பதற்கு அனுமதி அளிப்பதில்லை. குழந்தைக்கு 24ம் தேதி (நாளை) பிறந்தநாள். அதனால், அந்த பிறந்தநாளில் பிரேம் கலந்துகொள்ள அனுமதி அளித்து உத்தரவிட வேண்டும்' என்று கூறினார்.

இதற்கு மாலா தரப்பு வக்கீல் எதிர்ப்பு தெரிவித்து வாதிட்டார். இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி பிறப்பித்த உத்தரவில் கூறியிருப்பதாவது: குழந்தையின் பிறந்தநாளை மனுதாரர் மாலா, எதிர்மனுதாரர் பிரேம், தாத்தா, பாட்டி, சித்தப்பா, சித்தி என்று அனைத்து உற்றார், உறவினர்களுடன் சென்னை குடும்பநல கோர்ட்டு வளாகத்தில் உள்ள குழந்தைகள் காப்பகத்தில் நாளை (திங்கட்கிழமை) காலை 11 மணிக்கு கொண்டாடலாம்.

இந்த பிறந்தநாள் நிகழ்ச்சியை கவனிக்க தமிழ்நாடு மாநில சட்ட பணிகள் ஆணையத்தின் உறுப்பினர் செயலர், தன்னார்வலர்களை நியமிக்க வேண்டும். பின்னர், இந்தநிகழ்வு குறித்து 26ம் தேதி அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். இவ்வாறு நீதிபதி உத்தரவிட்டார்.

# தெருக்குழாயில் தண்ணீர் பிடித்த போது கார் மோதி 3 பெண்கள் பலி தூத்துக்குடியில் சோகம்

தூத்துக்குடி, ஜூன் 25

தூத்துக்குடி மாவட்டம் பெருங்குளத்தை சேர்ந்த தர்மராஜன் என்பவரது மகன் மணிகண்டன். இவர் தனது நண்பர்களுடன் பெங்களூருவில் இருந்து நாலுமாவடிக்கு காரில் வந்துகொண்டிருந்தார். காரில் அதிவேகமாக வந்ததாக கூறப்படுகிறது.

அப்போது முக்காணியில் சாலையோர தெருக்குழாயில் தண்ணீர் பிடித்துக்கொண்டிருந்த 4 பெண்கள் மீது கார் மோதியது. இதில் நால்வரும்




தூக்கி வீசப்பட்ட நிலையில் சாந்தி, அமராவதி, பார்வதி ஆகிய 3 பெண்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். படுகாயமடைந்து உயிருக்கு போராடிக்கொண்டிருந்த சண்முகத்தாய் என்பவரை அப்பகுதியை சேர்ந்தவர்கள் மீட்டு சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

விபத்தை ஏற்படுத்திய மணிகண்டனை போலீசார் கைதுசெய்துள்ள நிலையில், உயிரிழந்தவர்களின் உறவினர்கள் அப்பகுதியில் சாலை மறியலில் ஈடுபட முயன்றதால் சிறிது நேரம் பரபரப்புடன் காணப்பட்டது. கார் மோதி 3 பெண்கள் உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# சிறுமியை கடத்திச்சென்று திருமணம்: வாலிபருக்கு 20 ஆண்டு சிறை தண்டனை

விருதுநகர், ஜூன் 25

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் திரவுபதி அம்மன் கோவில் தெருவை சேர்ந்தவர், புலியூர் சித்தன் என்ற பிரகாஷ் (வயது 24). இவர் 4 ஆண்டுகளுக்கு முன்பு 15 வயது சிறுமியைகடத்திச்சென்று திருமணம் செய்தார். பின்பு சிறுமியை அடித்து சித்ரவதை செய்து வந்துள்ளார்.

இதுகுறித்த புகாரில், ராஜபாளையம் அனைத்து மகளிர் போலீசார் பிரகாசை கைது செய்து ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள மாவட்ட மகிளா விரைவு கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தனர்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி பகவதிஅம்மாள், பல்வேறு குற்றச்சாட்டுகள் தொடர்பாக பிரகாசுக்கு மொத்தம் 51 ஆண்டுகள் சிறை தண்டனைவிதித்தார். ஆனால்,



தண்டனையை ஏக காலத்தில் அனுபவிக்க வேண்டும் என தீர்ப்பில் கூறப்பட்டு இருப்பதால், அதிகபட்ச சிறை தண்டனையான 20 ஆண்டுகள் சிறையை அவர் அனுபவிக்க வேண்டும்.

மேலும் அவருக்கு, ரூ.34 ஆயிரம் அபராதம் விதித்தும் தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட சிறுமிக்கு தமிழக அரசு ரூ.5 லட்சம் இழப்பீடு வழங்கவும் நீதிபதி பரிந்துரைத்துள்ளார்.

# மொபட்டில் சென்ற கோர்ட்டு ஊழியர்: எமனாக வந்த மாடு... நொடியில் நேர்ந்த கொடூரம்

நெல்லை, ஜூன் 25

நெல்லை பேட்டை தங்கம்மன்கோவில்தெருவை சேர்ந்தவர் வேலாயுதராஜ் (வயது58). இவர்நெல்லை மாவட்ட முதன்மை கோர்ட்டில் இளநிலை கட்டளை பணியாளராக வேலை செய்து வந்தார். இவர் நேற்று காலை வீட்டில் இருந்து மொபட்டில் புறப்பட்டார்.

வண்ணார்பேட்டை தெற்கு புறவழிச்சாலையில் தனியார் ஆஸ்பத்திரி அருகே சென்றபோது, அங்கு 4 வழிச்சாலை பணிகள் நடைபெறுவதால் போக்குவரத்து ஒரு பாதையில் மட்டும் திருப்பி விடப்பட்டிருந்தது. அதில் எதிரெதிரே வாகனங்கள் கடந்து சென்றன.

அந்த ரோட்டில் வேலா




யுதராஜ் மொபட்டில் சென்று கொண்டிருந்தார். அப்போது அங்கு சாலையில் 2 மாடுகள் ஒன்றுக்கு ஒன்று முட்டியது. இதில் ஒரு மாடு, மற்றொரு மாட்டையும், வேலாயுதராஜையும் வேகமாக மொபட்டுடன் சேர்த்து முட்டி தள்ளியது. இதனால் வேலாயுதராஜ் நிலைதடுமாறி சாலையில் விழுந்தார்.

அப்போது எதிரே நெல்லை புதிய பஸ் நிலையத்தில் இருந்து குமுளி நோக்கி சென்ற அரசு பஸ் சக்கரத்தில் வேலாயுதராஜ் சிக்கினார்.

இதில் பலத்த காயம் அடைந்த அவர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக இறந்தார்.

தகவல் அறிந்ததும் நெல்லை மாநகர போக்குவரத்து புலனாய்வு பிரிவு போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் அன்னராஜ் தலைமையில் போலீசார் விரைந்து வந்தனர். வேலாயுதராஜ் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக பாளையங்கோட்டை ஐகிரவுண்டு அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

மாடு முட்டியதில் சாலையில் விழுந்த கோர்ட்டு ஊழியர், பஸ் சக்கரத்தில் சிக்கி பலியான சம்பவம் அந்த பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியது. மேலும், இந்த விபத்து காட்சிகள் அங்குள்ள ஒரு கண்காணிப்பு கேமராவில் பதிவானது. தற்போது இந்த காட்சிகள் சமூக வலைதளங்களில் பரவி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# 'மாஸ்க்' திரைப்படத்தின் படப்பிடிப்பு புகைப்படங்கள் இணையத்தில் வைரல்



தமிழ் சினிமாவின் முன்னணி நடிகராக இருப்பவர் கவின். லிப்ட், மற்றும் டாடா படங்களின் வெற்றி கவினுக்கு வெள்ளித்திரையில் படிக்கட்டுகளாய் மாறி இருக்கிறது. அவரது டாடா திரைப்படம் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது.

இவரது நடிப்பில் சமீபத்தில் வெளியான திரைப்படம் ஸ்டார். இப்படம் கலவையான விமர்சனங்களைப் பெற்றாலும் நல்ல வசூலைப் பெற்று வருகிறது. இந்நிலையில் இப்போது கவின் தன்னுடைய அடுத்த படத்தைத்தொடங்கியுள்ளார். இந்தபடத்துக்கு 'மாஸ்க்' என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது.

ஜி.வி.பிரகாஷ் இசையமைக்கிறார். அறிமுக இயக்குனர் விகர்ணன் அசோக் இயக்கும் இந்த படத்தில் கவினுடன் ஆண்ட்ரியா முக்கிய வேடத்தில் நடிக்கிறார். மேலும், சார்லி, ருஹானி ஷர்மா, பாலா சரவணன், விஜே அர்ச்சனா, சந்தோக் மற்றும் பலர் நடிக்கிறார்கள்.

இந்த படத்தை வெற்றிமாறனின் கிராஸ் ரூட் பிலிம்ஸ் நிறுவனமும், பிளாக் மெட்ராஸ் நிறுவனமும் இணைந்து தயாரிக்கின்றன. இந்நிலையில், 'மாஸ்க்'திரைப்படம் பூஜையுடன் மே மாதம் 17ம் தேதி தொடங்கியது. இப்படத்தில் ஆண்ட்ரியா வில்லியாக நடிப்பதாக கூறப்படுகிறது. இந்த படத்தை விக்ரணன் அசோக் இயக்குகிறார்.

இத்திரைப்படத்தின் படப்பிடிப்பு கடந்த ஜூன் மாதம் 13ம் தேதி தொடங்கியது. இந்நிலையில், மாஸ்க் திரைப்படத்தின் படப்பிடிப்பு தளத்திலிருந்து எடுக்கப்பட்ட புகைப்படங்கள் இணையத்தில் வெளியாகி வைரலாகி வருகின்றன. வெற்றிமாறன், கவின் மற்றும் படக்குழுவினர் அந்த புகைப்படத்தில் இடம்பெற்றிருந்தனர்.

# சர்வதேச திரைப்பட விழாவில் சூரி நடித்த 'ஏழு கடல் ஏழு மலை'




'தங்க மீன்கள்', 'பேரன்பு' உள்ளிட்ட படங்களை இயக்கி புகழ்பெற்றவர் இயக்குனர் ராம். இவர் 'பிரேமம்' படம் மூலம் தமிழ் ரசிகர்களின் மனதில் இடம்பிடித்த நடிகர் நிவின்பாலியை வைத்து 'ஏழு கடல் ஏழு மலை' எனும் படத்தை இயக்கினார்.

'மாநாடு' படத்தின் மிகப் பெரிய வெற்றியைத் தொடர்ந்து தயாரிப்பாளர் சுரேஷ் காமாட்சி தனது விஹவுஸ் புரொடக்சன்ஸ் சார்பில் இப்படத்தை தயாரித்திருந்தார். கதாநாயகியாக அஞ்சலி நடிக்க, முக்கிய கதாபாத்திரத்தில் சூரி நடித்தார். யுவன் சங்கர் ராஜா இசையமைத்த இந்த படம் கடந்த வருடம் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றது. இந்நிலையில், ரொமேனியா நாட்டின் டிரான்சில்வேனியா சர்வதேச திரைப்பட விழாவில் இன்று 'ஏழு கடல் ஏழு மலை' திரைப்படம் 'நோ லிமிட்' எனும் பிரிவில் திரையிடப்பட இருக்கிறது. முன்னதாக, ரோட்டர்டாம் மற்றும் மாஸ்கோ சர்வதேச திரைப்பட விழாவில் இப்படம் திரையிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# 'ரஜினி சார் பாவம்...ரொம்ப கஷ்டமா இருக்கு' மன்சூர் அலிகான் பேச்சு

ஏ.எல்.ராஜா இயக்கத்தில் டி.டி.சினிமா ஸ்டுடியோ பட நிறுவனம் தயாரித்துள்ள படம் சூரியனும் சூரியகாந்தியும். இப்படத்தில், ஶ்ரீ ஹரி கதாநாயகனாக நடித்துள்ளார். இப்படத்தின் இசைவெளியீட்டு விழா சென்னையில் நடைபெற்றது. அதில் பங்கேற்ற மன்சூர் அலிகான் பேசுகையில்,

"ரஜினி சாருக்கு இப்போது 70, 80 வயது ஆகிவிட்டது. இதனால் அவருக்கு ஹீரோயின் கிடைப்பது ரொம்ப கஷ்டமா இருக்கு. அவருக்கு மூத்த நடிகைகள்தான் ஜோடியாக முடியும். உதாரணமாக ஐஸ்வர்யா ராயை கூறலாம். அவர்களை நடிக்க வைத்தாக வேண்டும் என்று தயாரிப்பாளர்கள் நினைக்கிறார்கள். கோடிக்கணக்கில் கொட்டி அவர்களை தேடித்தான் செல்கிறார்கள். இப்படியே போகும் பட்சத்தில் சின்ன பட்ஜெட் படங்களின் நிலைமை படுமோசமாகிவிடும். சின்ன பட்ஜெட் படம் என்று நினைக்காமல் உள்ளே இருக்கும் கதையை பாருங்கள்" என்றார்.

# விஜய்யுடன் இருக்கும் புகைப்படத்தை பகிர்ந்து வாழ்த்து கூறிய திரிஷா வைரல்



நடிகர் விஜய் நேற்று தனது 50வது பிறந்தநாளை கொண்டாடினார். அவருக்கு பல்வேறு அரசியல் தலைவர்கள், சினிமா பிரபலங்கள் தங்களது வாழ்த்துகளை தெரிவித்தனர். இந்நிலையில், நடிகை திரிஷா தனது எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்துள்ள புகைப்படம் வைரலாகி வருகிறது. அதன்படி, விஜய்யுடன் இருக்கும் புகைப்படத்தை இணையத்தில் பகிர்ந்துள்ள திரிஷா, அவருக்கு பிறந்தநாள் வாழ்த்து கூறியுள்ளார். தற்போது விஜய் நடிப்பில் உருவாகியுள்ள படம் 'தி கோட்'. இப்படத்தின் முதல் பாடலான 'விசில் போடு' சமீபத்தில் வெளியாகி வைரலானது. இந்நிலையில், படத்தின் 2வது பாடலான 'சின்ன சின்ன கண்கள்' நேற்று அவரது பிறந்தநாளை முன்னிட்டு வெளியானது. இப்பாடல் விஜய் மற்றும் மறைந்த பாடகி பவதாரணி குரலில் உருவாகி இருந்தது.

# ஷாருக்கானுக்கு ஜோடியாகும் சமந்தா?



பிரபல பாலிவுட் நடிகர் ஷாருக்கான். இவர் தற்போது ராஜ்குமார் ஹிரானி இயக்கத்தில் மீண்டும் நடிக்க உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. மேலும், இப்படத்தில் இவருக்கு ஜோடியாக சமந்தா நடிக்க இருப்பதாகவும் கூறப்படுகிறது.

ஷாருக்கான் முன்னதாக, ஜவான் படத்தில் தென்னிந்திய நடிகையான நயன்தாராவுடன நடித்திருந்தார். தற்போது சமந்தா உடன் நடிக்க இருப்பது இருவரது ரசிகர்களையும் சந்தோஷத்தில் ஆழ்த்தியுள்ளது. இப்படம் தேசபக்தி நிறைந்த படமாக உருவாக இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஷாருக்கான் ஏற்கனவே ராஜ்குமார் ஹிரானி இயக்கத்தில் 'டங்கி' படத்தில் நடித்தார். இந்த படம் ரூ.500 கோடிக்கு மேல் வசூல் செய்தது. இந்த நிலையில் இந்த கூட்டணி மீண்டும் புதுப்படம் மூலம் இணைய இருக்கிறது.

சமந்தா கடைசியாக விஜய் தேவரகொண்டாவிற்கு ஜோடியாக குஷி படத்தில் நடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் வெப் சீரிஸ் மற்றும் படங்களில் நடித்து வருகிறார்.

# சர்வதேச திரைப்பட விழாவில் திரையிடப்படும் '12த் பெயில்'



ஷாங்காய் சர்வதேச திரைப்பட விழா கடந்த 14ம் தேதி தொடங்கியது. இன்று இந்த விழாவின் கடைசி நாளாகும். இந்நிலையில், இந்த விழாவில் விது சோப்ரா இயக்கத்தில் விக்ராந்த் மாஸ்ஸி நடித்த '12த் பெயில்' படம் திரையிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

விது சோப்ரா இயக்கத்தில் கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் 27ம் தேதி வெளியான திரைப்படம் '12த் பெயில்'. இந்தி, தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் வெளியான இந்த படம் விமர்சன ரீதியாகவும் வசூல் ரீதியாகவும் நல்ல வரவேற்பை பெற்றது. விக்ராந்த் மாஸ்ஸி, மேதா சங்கர், ஆனந்த் வி ஜோஷி உள்ளிட்ட பலர் நடித்த இந்த படம் மனோஜ்குமார் ஷர்மா ஐபிஎஸ் அதிகாரி மற்றும் அவரது மனைவி ஸ்ரத்தா ஜோஷி ஐஆர்எஸ்ஸின் வாழ்க்கையை தழுவி எடுக்கப்பட்டது.

இந்த படம் கடந்த ஆண்டு டிசம்பர் 29ம் தேதி ஓடிடியில் வெளியான பிறகு அனைத்து தரப்பு ரசிகர்களாலும் பாராட்டப்பட்டது. மேலும் சிறந்த படத்திற்கான பிலிம் பேர் விருதையும் வென்றது குறிப்பிடத்தக்கது.

# அரையிறுதிக்கு முன்னேறப்போவது யார்? முக்கிய ஆட்டத்தில் டாஸ் வென்ற தென் ஆப்பிரிக்கா பந்துவீச்சு தேர்வு




டி20 உலகக்கோப்பை தொடர் பரபரப்பான கட்டத்தை எட்டியுள்ளது. சூப்பர் 8 சுற்றில் இன்று நடைபெற்று வரும் முக்கிய ஆட்டத்தில் வெஸ்ட் இண்டீஸ் தென் ஆப்பிரிக்கா அணிகள் மோதுகின்றன.

இந்த ஆட்டத்தில் டாஸ் வென்ற தென் ஆப்பிரிக்க அணி பந்துவீச்சை தேர்வுசெய்துள்ளது. அதன்படி வெஸ்ட் இண்டீஸ் அணி முதலில் பேட்டிங் செய்து வருகிறது. இதில் யார் வெற்றி பெறுகிறார்களோ அவர்கள் அரையிறுதி சுற்றுக்கு முன்னேறுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# வாணவேடிக்கை காட்டிய ஜோஸ் பட்லர்: அமெரிக்காவை ஊதித் தள்ளிய இங்கிலாந்து அணி




டி20 உலகக்கோப்பை தொடரில் சூப்பர் 8 சுற்று நடைபெற்று வருகிறது. இதில் இன்று நடைபெற்ற ஆட்டத்தில் இங்கிலாந்து அமெரிக்கா மோதின. இதில் டாஸ் வென்ற இங்கிலாந்து அணி பந்து வீச்சு தேர்வு செய்தது.

இதையடுத்து அமெரிக்கா முதலில் பேட்டிங் செய்தது. அந்த அணியின் தொடக்க வீரர்களாக ஸ்டீவன் டெய்லர், அண்டிரிஸ் களமிறங்கினர். அண்டிரிஸ் 8 ரன்கள் எடுத்திருந்த நிலையில் டாப்லி பந்து வீச்சில் முதல் ஓவரிலேயே அவுட் ஆனார். அடுத்துவந்த நிதிஷ் குமார் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். தொடக்க வீரர் டெய்லர் 12 ரன்னில் ஆட்டமிழந்தார். பின்னர் களமிறங்கிய கேப்டன் ஆரோன் ஜோன்ஸ் 10 ரன்னில் அவுட் ஆனார். சற்று நிலைத்து நின்று ஆடிய தொடக்க வீரர் நிதிஷ் குமார் 30 ரன்னிலும், பின்னர் களமிறங்கிய கோரி ஆண்டர்சன் 29 ரன்னிலும் ஆட்டமிழந்தனர்.

இறுதியில் அமெரிக்கா 18.5 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 115 ரன்களை மட்டுமே எடுத்தது. இங்கிலாந்து தரப்பில் 19வது ஓவரை வீசிய கிறிஸ் ஜோர்டன் ஹாட்ரிக் விக்கெட்டுகளை வீழ்த்தினார். 19வது ஓவரின் முதல் பந்தில் விக்கெட் வீழ்த்திய ஜோர்டன், 2வது பந்தில் ரன் எதுவும் கொடுக்கவில்லை. அடுத்து வீசிய 3 பந்துகளிலும் ஹாட்ரிக் விக்கெட்டுகளை வீழ்த்தினார். 19வது ஓவரில் மட்டும் 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இங்கிலாந்து தரப்பில் சிறப்பாக பந்து வீசிய ஜோர்டன் 2.5 ஓவரில் 10 ரன்களை கொடுத்து 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதையடுத்து 116 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற எளிய இலக்குடன் இங்கிலாந்து அணியின் சார்பில் பிலிப் சால்ட் மற்றும் ஜோஸ் பட்லர் ஆகியோர் களமிறங்கினர். அதிரடியாக ரன் சேர்க்கத் துவங்கிய இந்த ஜோடியால், இங்கிலாந்து அணியின் ரன் ரேட் வேகமாக உயர்ந்தது.

இந்த ஜோடியில் அதிரடியில் மிரட்டிய ஜோஸ் பட்லர் 32 பந்துகளில் தனது அரை சதத்தை பதிவு செய்து அசத்தினார்.

இறுதியில் ஜோஸ் பட்லர் 38 பந்துகளில் 7 சிக்சர்கள் 6 பவுண்டரிகளுடன் 83 ரன்களும் , பிலிப் சால்ட் 25 (21) ரன்களும் எடுத்து கடைசிவரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர். முடிவில் இங்கிலாந்து அணி 9.4 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 117 ரன்கள் எடுத்தது. இதன்மூலம் அமெரிக்கா அணிக்கு எதிரான ஆட்டத்தில் 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் இங்கிலாந்து அணி அபார வெற்றிபெற்றது.

# கோபா அமெரிக்க கால்பந்து தொடர்: வெனிசுலா, மெக்சிகோ அணிகள் வெற்றி




உலகக்கோப்பை, யூரோகோப்பை கால்பந்து தொடருக்கு அடுத்து புகழ்பெற்ற கோபா அமெரிக்க கால்பந்து தொடர் அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது. இந்த தொடர் கடந்த 1916ம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகிறது. இந்த தொடர் வரும் ஜூலை 15ம் தேதி வரை நடைபெறுகிறது.

இந்நிலையில் இந்த தொடரில் சாண்டா கிளாராவில் இன்று நடைபெற்ற ஒரு ஆட்டத்தில் வெனிசுலா ஈகுவடார் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தின் முதல் பாதியில் ஈகுவடார் அணி ஒரு கோல் அடித்து 10 என முன்னிலை பெற்றது. இதையடுத்து தொடர்ந்து நடைபெற்ற 2வது பாதி ஆட்டத்தி அபாரமாக செயல்பட்ட வெனிசுலா அணி அடுத்தடுத்து 2 கோல்களை அடித்து 20 என முன்னிலை பெற்றது.

இறுதியில் ஆட்டநேர முடிவில் வெனிசுலா அணி 21 என்ற கோல் கணக்கில் ஈகுவடாரை வீழ்த்தி வெற்றி பெற்றது. இதையடுத்து டெக்சாசில் நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் மெக்சிகோ ஜமைக்கா அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் 10 என்ற கோல் கணக்கில் மெக்சிகோ வெற்றி பெற்றது.

# ஹாலே ஓபன் டென்னிஸ்: ஜானிக் சின்னர் சாம்பியன்



ஹாலே ஓபன் டென்னிஸ் தொடர் ஜெர்மனியில் நடைபெற்றது. இந்த தொடரில் இன்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் இறுதிப்போட்டியில் இத்தாலி வீரர் ஜானிக் சின்னர், போலந்து வீரர் ஹர்காக்ஸ் உடன் மோதினார்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த போட்டியில், சின்னர் 76 (108), 76 (72) என்ற செட் கணக்கில் ஹர்காக்சை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றார். ஜானிக் சின்னர் தரவரிசையில் முதலிடம் பெற்ற பிறகு வென்ற முதல் பட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

# டி20 உலகக்கோப்பை: அமெரிக்காவுக்கு எதிராக டாஸ் வென்ற இங்கிலாந்து பந்து வீச்சு தேர்வு




டி20 உலகக்கோப்பை தொடரில் சூப்பர் 8 சுற்று நடைபெற்று வருகிறது. இதில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் இங்கிலாந்து அமெரிக்கா மோத உள்ளன.

இந்த ஆட்டத்திற்கான டாஸ் சுண்டப்பட்டது. இதில் டாஸ் வென்ற இங்கிலாந்து பந்து வீச்சு தேர்வு செய்தது. இதையடுத்து அமெரிக்கா முதலில் பேட்டிங் செய்ய உள்ளது.

# ஐ.எஸ்.எல். கால்பந்து: சென்னை அணி வீரர் கானர் ஷீல்ட்ஸ் ஒப்பந்தம் நீட்டிப்பு




இந்தியன் சூப்பர் லீக் (ஐ எஸ் எல் ) கால்பந்து போட்டியில் பங்கேற்கும் அணிகளில் ஒன்றான முன்னாள் சாம்பியன் சென்னையின் எப்.சி அணியில் இடம்பெற்றுள்ள ஸ்காட்லாந்து வீரர் கானர் ஷீல்ட்சின் ஒப்பந்தம் ஒரு ஆண்டு நீட்டிக்கப்பட்டுள்ளது.

26 வயது முன்கள வீரரான கானர் ஷீல்ட்ஸ் கடந்த 2023ம் ஆண்டு சென்னை அணியில் இணைந்தார். அவர் இதுவரை சென்னை அணிக்காக 27 ஆட்டங்களில் விளையாடி 5 கோல் அடித்திருப்பதுடன் 4 முறை கோல் போட உதவி புரிந்துள்ளார்.



பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி

நட்பாடல் தேற்றா தவர்

**விளக்கம்:**

மகிழும்படியாகப் பேசி நட்புக் கொள்ளுதல் நன்மை என்று தெளியாதவர் தம்மை விட்டு நீங்கும்படியாகப் புறம் கூறி நண்பரையும் பிரித்து விடுவர்.

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
www.dhinakani.com
Canara Bank Account : 120028528266
IFSC code : CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.